| | | |
|---|---|---|
| Class : 10th STD<br>Subject: தமிழ்<br>Question : Type A | NEW BHARATH MATRIC HR SEC SCHOOL<br><br>THIRUVARUR | Date : 27-12-2019<br>Time : 2.30 Hrs<br>Roll No:<br>Maximum Marks: 108 |

Instructions:
(i) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the hall supervisor immediately.
(ii) Use Black or Blue ink to write and pencil to draw diagram

**Choose correct Answer:** **PART - I** **28 x 1 = 28**
**ANSWER ALL QUESTIONS**

1 . 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் " நிலத்துக்கு நல்ல உரங்கள் , இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது ________
a)இலையும் சருகும் b)தோகையும் சண்டும் c)தாளும் ஓலையும் d)சருகும் சண்டும்
2 . வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கோட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ________
a)குலை வகை b)மணி வகை c)கொழுந்து வகை d)இலை வகை
3 . நெல், கேழ்வரகு போன்ற தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொல் ________
a)கோல் b)தாள் c)தூறு d)தண்டு
4 . நெட்டி, மிளகாய்ச் செடி போன்ற தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொல் ________
a)கோல் b)தாள் c)தூறு d)தண்டு
5 . தாவரத்தின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் குச்சியின் பிரிவு ________
a)கொம்பு b)குச்சு c)கிளை d)இணு க்கு
6 . அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளையின் பெயர் ________
a)சினை b)கவை c)போத்து d)கொம்பு
7 . தாவரத்தின் காய்ந்த குச்சியின் பெயர் ________
a)வெங்களி b)கட்டை c)சுள்ளி d)விறகு
8 . தாவரத்தின் காய்ந்த சிறுகிளையின் பெயர் ________
a)வெங்களி b)கட்டை c)சுள்ளி d)விறகு
9 . நெல், புல் முதலியவற்றின் இலை வகைகளைக் குறிக்கும் சொல் ________
a)இலை b)ஓலை c)தோகை d)தாள்
10 . சோளம்,கரும்பு முதலியவற்றின் இலை வகைகளைக் குறிக்கும் சொல் ________
a)இலை b)ஓலை c)தோகை d)தாள்
11 . புளி, வேம்பு முதலியவற்றின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொல் ________
a)கொழுந்து b)தளிர் c)குருத்து d)கொழுந்தாடை
12 . கரும்பின் நுனிப் பகுதியைக் குறிக்கும் சொல் ________
a)கொழுந்து b)தளிர் c)குருத்து d)கொழுந்தாடை
13 . மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை ________
a)அரும்பு b)செம்மல் c)வீ d)போது
14 . பூ விரியத் தொடங்கும் நிலை ________
a)அரும்பு b)செம்மல் c)வீ d)போது
15 . "திருவள்ளுவர் தவச்சாலை" அமைந்துள்ள ஊர் ________
a)அல்லூர் b)மல்லூர் c)கடலூர் d)வேலூர்
16 . தென்னை, பனை முதலியவற்றின் பிஞ்சு வகைகளைக் குறிக்கும் சொல் ________
a)வடு b)குரும்பை c)கச்சல் d)கவ்வை
17 . கேழ்வரகு,சோளம் முதலியவற்றின் குலை வகைகளைக் குறிக்கும் சொல் ________
a)கதிர் b)தாறு c)கொத்து d)சீப்பு
18 . வாழைத் தாற்றின் பகுதியைக் குறிக்கும் சொல் ________
a)கதிர் b)தாறு c)கொத்து d)சீப்பு
19 . சுருங்கிய பழத்தைக் குறிக்கும் சொல் ________
a)சிவியில் b)சூம்பல் c)வெம்பல் d)அழுகல்
20 . புழுபூச்சி அரித்த காய் அல்லது கனியை குறிக்கும் சொல் ________
a)சிவியில் b)சொத்தை c)வெம்பல் d)அழுகல்
21 . பழத்தின் தோல் மிக வன்மையானதைக் குறிக்கும் சொல் ________
a)தோடு b)உமி c)மட்டை d)ஓடு

22 . பழத்தின் தோல் மிக மெல்லியது என்பதைக் குறிக்கும் சொல் ________
a)தொலி b)உமி c)மட்டை d)ஓடு

23 . நெல், கம்பு முதலியவற்றின் மூடியைக் குறிக்கும் சொல் ___________
a)தோடு b)உமி c)மட்டை d)ஓடு

24 . கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்துகளைக் குறிக்கும் சொல் ___________
a)கூலம் b)விதை c)கொட்டை d)பயிறு

25 . அவரை,உளுந்து முதலியவற்றின் தானியங்களுக்கு வழங்கும் சொல் __________
a)விதை b)முத்து c)பயறு d)முதிரை

26 . நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலையைக் குறிக்கும் சொல் ___________
a)நாற்று b)கன்று c)குருத்து d)பிள்ளை

27 . வாழையின் இளநிலையைக் குறிக்கும் சொல் ___________
a)நாற்று b)கன்று c)குருத்து d)பிள்ளை

28 . உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு ____________
a)மலேசியா b)சிங்கப்பூர் c)இந்தியா d)இலங்கை

**PART - II** **10 x 2 = 20**

**ANSWER ALL QUESTIONS**

29. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி,எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

30. கோதுமையின் வகைகளை எழுதுக .

31. தமிழ்நாட்டு நெல் வகைகளை எழுதுக.

32. சம்பா நெல்வகைகளைக் கூறுக.

33. தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறுகூலங்கள் யாவை ?

34. புதிய சொற்களை உருவாக்கும் பொழுது செய்யவேண்டியவை யாவை ?

35. தமிழ்த்திரு இரா.இளங்குமரனார் எழுதிய நூல்கள் யாவை ?

36. காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.

37. தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.

38. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.

**PART - IV** **12 x 5 = 60**

**ANSWER ALL QUESTION**

39 . 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'.
இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

40 . தேவநேயப் பாவாணர் பற்றி எழுதுக.

41 . பொருத்துக :

| | | |
|---|---|---|
| 1 | தாள் | கரும்பு |
| 2 | கழி | புளி |
| 3 | கழை | நெல் |
| 4 | அடி | மூங்கில் |

42 . பொருத்துக :

| | | |
|---|---|---|
| 1 | இலை | காய்ந்த இலை |
| 2 | தாள் | பனை |
| 3 | ஓலை | வேம்பு |
| 4 | சருகு | நெல் |

43 . பொருத்துக :

| | | |
|---|---|---|
| 1 | வடு | பலாப்பிஞ்சு |
| 2 | மூசு | வாழைப்பிஞ்சு |
| 3 | கருக்கல் | மாம்பிஞ்சு |
| 4 | கச்சல் | இளநெல் |

44 . பொருத்துக :

| | | |
|---|---|---|
| 1 | கூலம் | ஆமணக்கு |
| 2 | முத்து | அவரை |
| 3 | கொட்டை | நெல் |
| 4 | முதிரை | மா |

45 . தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.

46 . தாவரங்களின் குலை வகைகளைக் குறைப்பதற்கான சொற்களை எழுதுக.

47 . கெட்டுப்போன காய்கனி வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?

48 . பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்கள் யாவை?

49 . தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்களை எழுதுக. (எவையேனும் இந்து)

50 . தானியங்களுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.

**PART - V** **2 x 8 = 16**

**ANSWER ALL QUESTION**

51 . தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

52 . தமிழ்ச்சொல் வளத்தை பயிர்வகைச் சொற்கள் வழிநின்று எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.